'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் XVII

சனவரி கி.பி. 2026

சான்று : 193



## காலங்கள் அவருடையன..

# வட்டார தியானக் கூட்டங்கள்






























**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

'வீறுகொள்! துணிந்து நில்! அஞ்சாதே! கவலைப்படாதே! ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமான நான், நீ செல்லும் இடமெல்லாம் உன்னோடு இருப்பேன்' (யோசு 1: 9) என்ற கடவுளின் வாக்குறுதி இன்னும் இந்த புதிய ஆண்டிலே நம்மை முழுவதும் வழிநடத்தட்டும் என வாழ்த்துகிறேன், செபிக்கிறேன். உங்கள் அனைவருக்கும் என் இதயம் நிறைந்த, இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இப் புதிய ஆண்டிலே இறை பிரசன்னம் நம் ஒவ்வொருவரையும் வழிநடத்த ஒருவர் ஒருவருக்காய் இறைவேண்டல் செய்வோம்.

இந்த புதிய ஆண்டின் தொடக்கத்திலே நம் பல கிறிஸ்தவ சபைகள் சார்பில் பல்வேறு வாக்குத்தத்த, வாக்குறுதிக் கூட்டங்கள் நடைபெறும். அதில் பல்வேறு வாக்குத்தத்த, வாக்குறுதி அட்டைகள் வழங்கப்படும். அதைப் பற்றிய செழிப்பு போதனைகள் முழங்கமிடப்படும். இது போன்ற மூடநம்பிக்கைகள் சார்ந்த பல்வேறு நிகழ்வுகள் நடக்கும். ஒரு புதிய ஆண்டிற்குள் காலடி எடுத்து வைக்கிறோம் என்பது உண்மை. அதே நேரத்தில் இவ்வுலகில் நாம் வாழ்வதற்கு கடவுள் நிர்ணயித்த ஆண்டுகளில் ஒரு ஆண்டு குறைந்து விட்டது என்பதும் மறுக்க முடியாத உண்மை தானே! இந்த ஆண்டை திரும்பிப் பார்க்கும்போது நம் எல்லோருக்கும் ஒரே விதமாக இருந்திருக்காது. சிலருக்கு எந்த விதத்திலும் சொல்லும்படியான நிகழ்வுகள் இல்லாத வழக்கமான ஆண்டாக இருந்திருக்கலாம். சிலருக்கு கண்ணீரின் ஆண்டு, சிலருக்கு இது பல்வேறு வகையில் இழப்பின் ஆண்டு. சிலருக்கு போராட்டங்களின் ஆண்டு. சிலருக்கு நல்ல நிகழ்வுகளை கண்ட ஆண்டு. சிலருக்கு சில ஏமாற்றத்தின் ஆண்டு. சிலருக்கு மகிழ்ச்சியின், வெற்றியின் ஆண்டு. இவ்விதமாக கடந்து சென்ற ஆண்டு ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு உணர்வுகளை உருவாக்கிய ஆண்டு என்பதை யாராலும் மறுக்க முடியாது.

வீடு கட்ட முடியாமல் போனதை, நல்ல வாகனம் வாங்க முடியாமல் போனதை, திருமணம் முடியாமல் போனதே, வேலை வாய்ப்பு பெற முடியாமல் போனதே, பிள்ளைகளை உயர் படிப்புகள் படிக்க வைக்க முடியாமல் போனதே, பொருளாதாரத்தில் உயர முடியாமல் போனதே, வீண் விரயமான செலவுகளை தவிர்க்க முடியாமல் போனதே, ஆசைப்பட்டவைகளை அடைய முடியாமல் போனதே, நீதிமன்ற வழக்குகள் முடியாமல் போனதே என்று எண்ணி வேதனைப்பட்டு, இந்த ஆண்டு இப்படி ஆகிவிட்டதே எனப்பலர் வருத்தப்படலாம். ஆனால் கடவுளை அறிந்த நாம், கடவுளின் பணியாளர்களாகிய நாம் கடவுளுக்கு கனி கொடுக்க முடியாமல் போய்விட்டதே என்று எண்ணி வருந்திய உணர்வுகளை பெற்றிருக்கிறோமா? இறை உறவில், இறை ஒன்றிப்பில் வளர முடியாமல் போனதே என்று துயர பட்டிருக்கிறோமா? சான்று வாழ்வு வாழ்ந்து பிறருக்கு முன்பாக ஒளி வீச கடவுள்தந்த இன்னொரு ஆண்டு பலன் ஏற்படுத்தாமல் போய்விட்டதே என்று மனம் கலங்கி இருக்கிறோமா?

உண்மையில் நாம் எதைப் பற்றி கவலைப்பட வேண்டும் என்று சிந்தித்து செயல்படுவோம். புதிய ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். இந்த ஆண்டில் நம்முடைய வாழ்க்கை என்னும் வாகனம் எந்தெந்த பாதைகளில் பயணிக்கப் போகிறது என்பது நமக்கு தெரியாது .போலி போதகர்களின் செழிப்பு வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம். நம் சூழ்நிலைகள் எப்படி இருக்கப் போகிறது என்பதும் நமக்குத் தெரியாது. எவற்றையெல்லாம் காணப்போகிறோம் என்பது தெரியாது. மொத்தத்தில் எதுவுமே நமக்குத் தெரியாது.

'என் தந்தை தம் அதிகாரத்தால் குறித்து வைத்துள்ள நேரங்களையும் காலங்களையும்

அறிவது உங்களுக்கு உரியது அல்ல' (திப 1:7) என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தெளிவாகக் கூறியும் சில ஆன்மீக வியாபாரிகள் 'இப்படி நடக்கும்' 'அப்படி நடக்கும் 'என்று ஆருடம் சொல்வது நகைப்பிற்குரியது. இதை நம்பும் மக்கள் பெருகி வருகிறார்கள். அதில் நீங்கள் சிக்கி விடக்கூடாது. 'நாளைக்கு உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பது உங்களுக்கு தெரியாதே? நொடி பொழுதில் தோன்றி மறையும் புகை போன்றவர்கள் நீங்கள்' (யாக் 4:14) என்று புனித யாக்கோபு தெளிவாக கூறியிருக்கிறாரே. எனவே இவ்வாண்டு எப்படி இருக்கும் என்று சிந்திக்க வேண்டாம். 'இன்று நடக்கப் போவதே தெரியாது. நாளை நடக்கப் போவதை அறிந்தவன் போல் பெருமை பேசாதே (நீ மொ 27:1)என்று திருவிவிலியம் தெளிவாக கூறியும் பல போலி இறைவாக்கினார்கள் இம்மாத தொடக்கத்திலே பிதற்றுவார்கள். ஏமாற வேண்டாம்.

ஆனால் ஒரே ஒரு நம்பிக்கையை மட்டும் விட்டு விட வேண்டாம் .'என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது'(திபா 31:15) என்று திருப்பாடல் ஆசிரியர் அறிக்கையிடுவது போல நம் ஒவ்வொருவரின் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வும் கடவுளின் கரத்தில் உள்ளது. 'மனிதர் மீது நம்பிக்கை வைப்பது விட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்' (திபா 118:8) என்று கடவுளிடம் தஞ்சம் புகுவதே நல்லது (திபா 143:9,திபா 61:4). 'எதிர்காலத்தையும் இறுதி நாளையும் பற்றிய எண்ணங்கள் மனிதனுடைய சிந்தனையை குழப்பி உள்ளத்தை அச்சுறுத்துகின்றன'(சீஞா 40:2) என்று வாசிக்கிறோம். நம் சூழ்நிலைகள் எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் கடவுள் நம்மோடு இருக்கிறார். உடன் பயணிக்கிறார். அவரது பிரசன்னத்தில் தான் நாம் இருக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை. திருவிவிலியத்தில் கடவுள் பல முறை 'நான் உன்னோடு இருக்கிறேன்' என்று உறுதிப்பட கூறி இருக்கிறார் .அதனால் தான் ஆபிரகாம் தாம் எங்கே போக வேண்டும் என்று தெரியாது இருந்தும் அவர் புறப்பட்டுச் சென்றார் (எபி 11:8). இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் (மத் 1:23)என்று பொருள். நாம் செல்கிற பாதை கரடு முரடாக இருக்கலாம். ஆனால் நம்மைக் கரம்பிடித்து நடத்த நம்மோடு நம் கடவுள் வருகிறாரே !நாம் ஏன் கலங்க வேண்டும்? நாம் கடந்து செல்லும் பாதை இருளாக இருக்கலாம். ஆனால் நம்மோடு வருகிற கடவுள் ஒளியாய் இருக்கிறாரே! நாம் ஏன் பயப்பட வேண்டும்? நம் பயணத்தில் நம்மோடு யாருமில்லாமல் இருக்கலாம். ஆனால் கடவுள் நம்மோடு பயணிக்கிறாரே !ஏன் தனிமையுணர்வு நம்மை பாதிக்க வேண்டும்? நமக்கு பல்வேறு இடர்கள் ,துன்பங்கள் வரலாம். அதை சமாளிக்கப் போதுமான வலிமை இல்லாமல் இருக்கலாம். ஆனால் வலுவின்மையில் நம்மைத் தாங்கும் இறை அருள் நமக்கு தரப்பட்டுள்ளதே !இப் புதிய ஆண்டு எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும்.

எல்லா வாக்குறுதிகளுக்கும் மேலான வாக்குறுதி யாகிய 'இதோ! உலகம் முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்' (மத் 28:20) என்ற வாக்குறுதி நிரந்தரமானது. நம்பகமானது. உறுதியானது. தந்தை கடவுள் 'எனது பிரசன்னம் உன்னோடு செல்லும்' (விப 33:14) என்று தெளிவாகக்கூறியிருக்கிறார். புதிய திருத்திய பதிப்பில் 'நானே உனக்கு முன்பாக செல்வேன்' என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. தூய ஆவியாரின் உடனிருப்பு உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது (யோவா 14:26). மூவொரு கடவுளின் பிரசன்னம், உடனிருப்பு இருக்கும்போது ஏன் நமக்கு கலக்கம்? இந்த ஆண்டு எப்படி இருக்கும் என்று எண்ணாமல் அது எப்படி இருந்தாலும் என்னோடு கடவுள் இருக்கிறார் என்ற உணர்வைப் பெற்று வாழ ஒருவர் ஒருவருக்காய் செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 07.12.2025 அன்று நடைபெற்றது. இதில் 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 07.12.2025 அன்று நடைபெற்றது. இதில் 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. அடைக்கலம், நற்பணி V. செங்கோல் மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 13.12.2025 அன்று நடைபெற்றது. இதில் 16 கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி A. ஆரோக்கியமேரி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை ஆலயத்தில் 14.12.2025 அன்று நடைபெற்றது. இதில் 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி பெ. தெரசா மிரண்டா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 14.12.2025 அன்று நடைபெற்றது. இதில் 06 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை I. ஜோசப் இருதயம், நற்பணி M. சகாயமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 14.12.2025 அன்று நடைபெற்றது. இதில் 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி அம்பிகா எலியாஸ், நற்பணி இரா அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 21.12.2025 அன்று நடைபெற்றது. இதில் 9 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை Sr. செலின் பிரபா, நற்பணி J.அருள் இளங்கோ ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 21.12.2025 அன்று நடைபெற்றது. இதில் 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X சி.கே. மங்கலம், புனித பேதுரு ஆலயத்தில் 21.12.2025 அன்று நடைபெற்றது. இதில் 3 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரி புஷ்பம், நற்பணி A. சகாய தமிழ் செல்வி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - XI இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 28.12.2025 அன்று நடைபெற்றது. இதில் 10 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M மரிய கிரகோரி, நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

02.08.2025 அன்று திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் நடைபெற்ற பரிந்துரை செபத்தில் இடைக்காட்டூர் வட்டாரப் பணியாளர்கள் நற்பணி அன்னமேரி, நற்பணி சு. தெரஸ், நற்பணி ப. ராஜம் சகாயராணி, செஞ்சை நற்பணி சூசைமேரி ஆகியோர் பங்கேற்றனர்.

03.12.2025 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 36 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி வியாகுலம், நற்பணி A. சகாய தமிழ் செல்வி, நற்பணி தை. அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

03.12.2025 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 70 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி விமல் சீமோன், நற்பணி அலெக்ஸாண்டர், நற்பணி ஜெயந்தி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

04.12. 2025 அன்று திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் யூபிலி ஆண்டு 24 மணி நேர தொடர் நற்கருணை ஆராதனை & திருவிழிப்பு நடைபெற்றது. இதில் அனைத்து வட்டாரத்தில் இருந்து பணியாளர்கள் கலந்து கொண்டு தொடர் ஆராதனை செய்தார்கள்.

07.12.2025 அன்று புதுக்கோட்டை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மேட்ச அலங்காரம், நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

07.12.2025 அன்று கோட்டைக்காடு புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.R.சூசைராஜ், நற்பணி S.ஹென்றி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

14.12.2025 அன்று பட்டுக்கோட்டை, உலக இரட்சகர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மேட்ச அலங்காரம், நற்பணி M.விசுவாசம் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

14.12. 2025 அன்று பூதலூர், புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி தை. அமல்ராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

14.12.2025 அன்று அம்மாபேட்டை, புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. அந்தோனி பிரகாஷ், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

21.12.2025 அன்று திருமயம், புனித அடைக்கலமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

21.12.2025 அன்று திருவாரூர், புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி A. சத்தியேந்திரன் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

21.12.2025 அன்று நமணசமுத்திரம், குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி L. ஆரோக்கியசாமி, நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

**ஆவுடைப் பொய்கை வட்டாரம்**

ஆவுடைப் பொய்கை வட்டாரத் தியானக் கூட்டம் 07.12.2025, ஞாயிற்றுக் கிழமை பேதுரு நகர் கோவிலில் காலை 10.30 மணிக்கு வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு 'நற்செய்திப் பணியாளர்களின் பணி வாழ்வு' என்ற தலைப்பில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினர். குழு ஆய்வு மற்றும் இல்லம் சந்திப்பு செய்முறைப் பயிற்சிகள் நடைபெற்றன. 29 பேர் பங்கேற்ற தியானம் மாலை 03.45 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி.**வில்லியம்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**பாம்பன் வட்டாரம்**

பாம்பன் வட்டாரத் தியானக் கூட்டம் 13.12.2025 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு அக்காள்மடம் புனித சவேரியார் கோவிலில் வட்டார நற்செய்திப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் துவங்கியது. செயலர் தொடர்பாளராகக் கலந்து கொண்டு 'நற்செய்திப் பணியாளர்களின் பணி' குறித்து செய்தியும், செயல்முறைப் பயிற்சியும் வழங்கி நெறிப்படுத்தினர். நண்பகல் உணவிற்குப் பின் குழு ஆய்வு மற்றும் இல்ல சந்திப்புச் செயல்முறைப் பயிற்சி நடைபெற்றன. 21 பணியாளர்கள் பங்கேற்ற இத்தியானம் மாலை 04.00 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி. **விமலா ராணி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**இடைக்காட்டூர் வட்டாரம்**

இடைக்காட்டூர் வட்டாரத் தியானக் கூட்டம் 14.12.2025 ஞாயிறு காலை 10.30 மணிக்கு இராஜகெம்பீரம் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் பீசர்பட்டணம் நற்செய்திப் பணியாளர்கள் தொடக்க வழிபாட்டுடன் துவங்கியது. செயலர் தொடர்பாளராகக் கலந்துகொண்டு 'நற்செய்திப் பணியாளர்களின் பணி வாழ்வு' என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார். நண்பகல் உணவிற்குப் பின் குழுப்பகிர்வும், செய்முறைப்பயிற்சியும் நடைபெற்றன. 30 பேர் கலந்து கொண்ட இத்தியானம் மாலை 04.15 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி. **எம்.சேவியர்** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**இராமேஸ்வரம் வட்டாரம்**

இராமேஸ்வரம் வட்டாரத் தியானக் கூட்டம் 18.12.2025 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நற்பணி சகாயமேரி இல்லத்தில் நடைபெற்றது. 'நற்செய்திப் பணியாளர்களின் பணி வாழ்வு' என்ற மையச் சிந்தனையில் நற்பணி எம்.மரிய கிரகோரி செய்தி வழங்கி நெறிப்படுத்தினார். 19 பேர் கலந்து கொண்ட இத்தியானம் மாலை 04.15 மணிக்கு கொள்கைப்பாடலுடன் நிறைவுற்றது.

நற்பணி. **பி. அந்தோணியம்மாள்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**சருகணி வட்டாரம்**

சருகணி வட்டாரத் தியானக் கூட்டம் 14.12.2025 அன்று திரு இருதயங்களின் கோவில் வளாகத்தில் நடைபெற்றது. நற்பணி ஏ. தனிநாயகம் நெறியாளராக கலந்துகொண்டார்கள். காலை 10.30 மணிக்கு தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. இல்லச் சந்திப்புப் பற்றிய செய்திகளை தனது அனுபவத்துடன் இணைந்து தவக்கால களப்பணி ஏன் அவசியம் என்பதை விளக்கினார்கள். ஐந்து குழுக்களாக பணியாளர்கள் பிரிந்து ஐந்து குடும்பங்களை சந்திக்கும் நிகழ்ச்சி நடித்து காண்பித்து நிறை குறைகள் விளக்கப்பட்டன. இல்ல சந்திப்பின்போது பணியாளர்கள் மனநிலை எப்படி இருக்க வேண்டும் களப்பணி முன்பாக என்னசெய்ய வேண்டும் என்ற விபரங்கள் வழங்கப்பட்டன. நேர்மறை எண்ணங்களுடன் குழுக்களாக செயல்பட்டு இறைப்பணி ஆற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. களப்பணி படிவம் நிரப்பி வழங்கப்பட்டது. கொள்கைப்பாடலுடன் அறிவிப்புகளுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. 19 பேர் கலந்து கொண்டார்கள்.

நற்பணி **லூயி ஆரோக்கியம்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**மானாமதுரை வட்டாரம்**

மானாமதுரை வட்டாரத் தியானக் கூட்டம் 14.12.2025 ஞாயிறு சிறுமலர் கூடத்தில் நடைபெற்றது. காலை 11.00 மணிக்கு துவக்க வழிபாட்டுடன் தியானம் தொடங்கியது. நற்செய்தி பணியாளர்கள் வாழ்வு பற்றியும் பணி செய்வது பற்றியும் நற்பணி எம்.மரிய கிரகோரி அவர்கள் நெறியாளராக கலந்துகொண்டு செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். 30

பேர் கலந்து கொண்டனர். கொள்கைப்பாடலுடன் 04.15 மணிக்கு தியானம் நிறைவுற்றது.

நற்பணி. **ஐ.புஷ்பராஜ்** வட்டாரக் கண்காணிப்பாளர்

**சாயல்குடி வட்டாரம்**

சாயல்குடி வட்டாரத் தியானக் கூட்டம் 21.12.2025 ஞாயிறு காலை 10.30 மணிக்கு ரோச் மாநகர் புனித சந்தியாகப்பர் சமுதாயக் கூடத்தில் வட்டார நற்செய்திப பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. 39 பணியாளர்கள் பங்கேற்ற இத்தியானத்தை செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு நெறிப்படுத்தினார். நற்செய்திப் பணியாளர்களின் பணிவாழ்வு என்ற தலைப்பில் செய்தி வழங்கினார். குழு ஆய்வும், செய்முறைப் பயிற்சியும் நடைபெற்றன. கொள்கைப்பாடலுடன் மாலை 04.15 மணிக்கு தியானம் நிறைவுற்றது.

நற்பணி. **ஸ்டீபன்,** வட்டாரக் கண்காணிப்பாளர்

**இராம்நகர் வட்டாரம்**

இராம்நகர் வட்டாரக் கூட்டமானது 07.12.2025 அன்று முள்ளிக்குண்டு புனித இஞ்ஞாசியார் கோவிலில் காலை பத்து மணிக்கு புகழ்ச்சி வழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி. விசுவாசம் கலந்து கொண்டு 'நற்செய்திப் பணியாளர்களின் வாழ்வு-II 'என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். 28 பணியாளர்கள் கலந்து கொண்டனர் . மாலை நான்கு மணிக்கு கூட்டம் நிறைவுற்றது.

நற்பணி. **எஸ். ஆரோக்கியசாமி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

## ஆடுகளுக்கு வாயில் நானே

ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும் அச்செல்வம் துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம் (நீமொ 10:22).

நம் விண்ணகத் தந்தையால் அழைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் இந்த உலகில் எல்லா நிலையிலும் நிறைவுள்ளவர்களாக வாழவேண்டும் என்பது அவரது விருப்பம். எனவேதான் நம் ஆண்டவர் உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராக இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவர்களாக இருங்கள் என்றார். நம் விண்ணகத் தந்தை நாம் எப்படி இந்த உலகில் ஒன்றும் குறைவுபடாமல் இருக்கவேண்டும் என்பதற்காக நம்மைப் படைப்பதற்கு முன்பே நமக்குத் தேவையான அனைத்தையும் மிகுதியாகப் படைத்துவிட்டார். கீழ்படியாமையால் ஏதேனில் அந்த ஆசியை இழந்தபோது அத்தோடு நம்மை விட்டுவிடாமல் மீண்டும் இழந்து போன ஆசியைக் கொடுப்பதற்கு ஆபிரகாமை அழைத்து அவரை அளவில்லாமல் ஆசிர்வதித்தார். அவரை ஆசிர்வதித்தது மட்டுமல்ல. உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும் என்ற மாறாத வாக்குறுதியையும் அளித்தார் (தொநூ 12:3). இந்த மாறாத வாக்குறுதி தான் இன்று வரை கிறிஸ்தவர்களாகிய நம்மைத் தாங்கி வருகிறது. உலக மனிதர்களுக்கென்று ஒரு பொதுவான ஆசிர் உண்டு. அதைக் கொண்டு ஒவ்வொரு மனிதரும் தங்கள் திறமைகளுக்கேற்ப அதை பெருகச் செய்கிறார்கள். பல்வேறு நிலைகளில் வளர்ச்சியும் அடைகிறார்கள். ஆனால் பணம் மட்டுமே அவர்களுக்கு ஆசிர்வாதமாகத் தோன்றும். தாங்கள் முன்னெடுக்கின்ற செயல்களில் சிறிதளவு துன்பம் வந்துவிட்டால் எல்லாம் முடிந்தது போல மனம் உடைந்து போவார்கள். ஆனால் நம் விண்ணகத் தந்தை அவரது பிள்ளைகளாகிய நமக்கு அருளப்பட்டுள்ள ஆசி முற்றிலும் மாறுபட்டது. அதை நம் உள்ளத்தில் வைத்துவிட்டார். அது ஒரு நாளும் குறைந்து போகாது. இதை ஆபிரகாமுடைய வாழ்க்கையில் நாம் காண்கிறோம். ஒரு முறை லோத்துவையும் அவருக்குண்டானவைகளையும் எதிரிகள் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்கள். பின்பு ஆபிரகாம் சென்று அவைகளை மீட்டு வந்தார். அப்போது சோதோம் அரசன் வந்து செல்வங்களையெல்லாம் நீர் எடுத்துக்கொள்ளும் ஆட்களை மட்டும் என்னிடம் ஒப்படையும் என்று சொன்னபோது விண்ணையும் மண்ணையும் தோற்றுவித்த உன்னத கடவுளாகிய ஆண்டவரிடம் ஆணையிட்டு சொல்றேன். நான்தான்

ஆபிகராமை செல்வன் ஆக்கினேன் என்று நீர் சொல்லாதபடி உமக்குரியவற்றில் ஒன்றையும் நான் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்றார் (தொநூ 14:17-25). ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும் அது துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம் என்ற வார்த்தை ஆபிரகாமின் வாழ்வில் நிறைவேறியது. அவர் எண்ணற்ற மக்களினங்களுக்குத் தந்தையானார். முதிர் வயதிலும் மிகப் பெரிய செல்வந்தராக வாழ்ந்தார். நிறைந்த வாழ்நாள்களைக் கடந்து நிறைவெய்தினார் (தொநூ 25:7-8). ஆண்டவரின் ஆசி அவர் உள்ளத்தில் இருந்ததால் உலக செல்வம் பெருகிய போதும் அவர் தடுமாறவில்லை. அதை எளிதாக மேற்கொண்டார் (தொநூ 13:1-9). ஆபிரகாமுக்கு அருளப்பட்ட ஆசி பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களுக்கு மட்டுமா? அவருக்கு அருளப்பட்ட வாக்குறுதியை எண்ணிப் பார்ப்போம். உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும் என்று கூறப்பட்டுள்ளது (தொநூ 12:3).

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இழந்துபோன ஆண்டவரின் ஆசியை மீண்டும் மனுக்குலத்திற்கு வழங்க கடவுள் ஆபிரகாமை அழைத்தார். அந்த ஆசியை அனைத்து மக்களும் பெற்று மகிழ இயேசு இவ்வுலகிற்கு வந்தார். மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்படுவர் என்று எழுதியுள்ளவாறு கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மை சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார். ஆபிரகாமுக்கு அளித்த ஆசி இயேசு கிறிஸ்து வழியாய் பிற இனத்தாருக்கும் கிடைக்கவும் வாக்களிக்கப்பட்ட தூய ஆவியானவரை நாம் நம்பிக்கையின் வழியாய் பெற்றுக் கொள்ளவும் இவ்வாறு செய்தார் (கலா 3:13-14). எனவே தான் நம் ஆண்டவர் சக்கேயு வீட்டிற்குச் சென்ற போது இவரும்ஆபிரகாமின் மகனே என்றார் (லூக்19:9). அதுபோல பதினெட்டு ஆண்டுகளாக நிமிர முடியாமல் இருந்த பெண்ணை குணமாக்கி இவரும் ஆபிரகாமின் மகள் என்றார் (லூக்19:9). இத்தகைய ஒப்பற்ற ஆசியை நம் ஆண்டவர் மூலம் விண்ணகத் தந்தை தந்து விட்டார் (எபே1:3). நம்மில் அநேகர் இதை அறியாதிருக்கிறோம். இதை புனித பவுல் மிகத் தெளிவாக விளக்குகிறதைக் கவனிப்போம். கடவுளுடைய அழைப்பு உங்களுக்கு எத்தகைய எதிர்நோக்கைத் தந்துள்ளது என்றும் இறைமக்களுக்கு அவர் அளிக்கும் உரிமைப் பேறு எவ்வளவு மாட்சிமிக்கது என்றும் அவர் மீது நம்பிக்கை கொள்பவர்களாகிய நம்மிடம் செயலாற்றுகிற அவரது வல்லமை எத்துணை ஒப்புயர்வற்றது. மேலானது என்றும் நீங்கள் அறியுமாறு உங்கள் அகக்கண்கள் ஒளியூட்டப் பெறுவனவாக என்கிறார் (எபே 1:17-19). இன்றைக்கு வெளி அடையாளங்களையே அதிகம் தேடுவதால் கடவுள் நமக்காக வைத்துள்ள ஆசீர் மிகவும் தூரமாகத் தெரிகிறது. ஏனெனில் இவ்வுலகின் தெய்வம் நம்பிக்கைக் கொண்டிராதோரின் அறிவுக் கண்களை குருடாக்கிவிட்டது. எனவே அவர்கள் கடவுளின் சாயலாய் விளங்கும் கிறிஸ்துவின் மாட்சி பொருந்திய நற்செய்தி ஒளியைக் காணமுடியவில்லை (2 கொரி4:4). ஆபிரகாமுக்கு அருளப்பட்ட ஆசியை நாமும் நம் குடும்பங்களும் பெற்று மகிழ எங்கோ அலைந்து தேட வேண்டியதில்லை. அதே பவுல் நம்முள் செயல்படுபவரும். நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுளுக்கே கிறிஸ்து இயேசு வழியாக மாட்சி உரித்தாகுக.(எபே 3:20-24) என்று விளக்குகிறார். இந்த ஆபிரகாமுக்கு கடவுள் அருளிய இந்த மாபெரும் ஆசிர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக மட்டுமே நாம் பெறமுடியும் என்பதை அறிவோம். நம் பணி குடும்பத்தில் உள்ள பல்வேறு குடும்பங்கள் கடவுளின் இந்த ஆசிரை பெறவழி தெரியாமலே வேதனையில் இருப்பதை நினைவில் கொள்வோம். எனவே இந்த புதிய ஆண்டில் நம் பணி குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களும் இந்த நிறைவான ஆசிரைப் பெற்று எல்லா நிலையிலும் உயர்வடைய உருக்கமாக வேண்டுவோம். குடும்பங்களில் கடவுளின் ஆசிர் பெருகும் போது அவரது செய்தி பரவுவதற்கு ஏதுவாக இருக்கும். ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும் அச்செல்வம் துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம் (நீமொ 10:22).

நற்பணி **ம.விசுவாசம்**, செஞ்சை.

# கனிவும் மனத்தாழ்மையும்

**அ. கனிவு:** 'இயேசு கிறிஸ்துவிடம் காணப்பட்ட கனிவான குணமே எண்ணற்ற மக்கள் மீட்படையக் காரணமாக இருக்கிறது. உலகனைத்தையும் வார்த்தையால் உண்டாக்கியவர். காற்றையும் கடலையும் தன் ஆணையால் அடக்கியவர். இறந்தவரை உயிரோடு எழுப்பியவர். விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் உடையவர். ஆனாலும், அவருடைய கைகள் கட்டப்பட்டு, காரி உமிழ்ந்து, கன்னத்தில் அறைந்து, கசையால் அடித்து ஒரு கொலைகாரனைப் போல, ஏளனம் செய்தபோதும் அவர் வாய் திறவாதிருந்தார். அநீதி செய்யப்பட்ட போதும் அதை கனிவோடு பொறுத்துக் கொண்டார். தன்னை முழுவதும் தந்தையின் திருவுளத்திற்கு அர்ப்பணித்து, தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக் கொண்டார் (எபி 12:2). இதுவே கனிவு.

> நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன் என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள். மத் 11:29

வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை. வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை. பழிக்கப்பட்டபோது பதிலுக்குப் பழிக்கவில்லை. துன்புறுத்தப்பட்டபோது அச்சுறுத்தவில்லை நியாயமாகத் தீர்ப்பு வழங்குவோரிடம் தம்மை ஒப்படைத்தார் (1பேது 2:22,23). அவர் ஒடுக்கப்பட்டார். சிறுமைப்படுத்தப்பட்டார்; ஆயினும் அவர் தம் வாயைத் திறக்கவில்லை. அடிப்பதற்கு இழுத்துச்செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார் (எசா 53:7). ஆகவேதான், இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும் அளவுக்கு கடவுளும் அவரை மிகவே உயர்த்தினார்.

இயேசுகிறிஸ்து எல்லா வல்லமையுள்ள இறைவன். அவர் நினைத்திருந்தால் தன்னைச் சிலுவையில் அறைந்த அத்தனை படைவீரர்களையும் எறும்பை நசுக்குவதைப்போல நசுக்கி அழித்திருக்க முடியும். ஆனால்,யாருக்கும் எந்த தீமையையும் செய்யவில்லை. எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார். எல்லோரையும் மன்னித்து ஏற்றுக்கொண்டார். ஆகவே,கனிவு என்பது பயந்த, பலமற்ற மனிதரிடம் காணப்படும் குணம் அல்ல. தங்களை அடக்கியாளும், ஆற்றல் பெற்றவர்களிடம் காணும் பண்பு. ஆகையால்தான், இயேசு கிறிஸ்து 'நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே, என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.' (மத் 11:29) என்கிறார்.

பூவுலகின் அனைத்து மாந்தரிலும் மோசே சாந்தமிகு மானிடராய் திகழ்ந்தார் (எண் 12:3) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், பாவச்செயல்களில் ஈடுபட்ட 3000 பேரைக் கொன்றதாக (விப 32:19,28) திருவிவிலியம் கூறுகிறது. ஆகவே, கனிவுடையோர் உடலாலும் உள்ளத்தாலும் பலம் இல்லாத கோழைகள் என்று எண்ணிவிடக் கூடாது.

**ஆ. தாழ்மை:** 'கடவுள் வடிவில் விளங்கிய இயேசு, கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே, கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை

அவருக்கு அருளினார்' (பிலி 2:6-11). ஆகையால்தான், தந்தையின் திருவுளத்திற்குப் பணிந்திருந்த இயேசு, தம் சீடர்களைப் பார்த்து, 'நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன் என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்' (மத் 11:29) என்கிறார்.

இவ்வுலகத்தின் மேன்மை எனக் கருதப்படும் ஆட்சி, அதிகாரம், செல்வம், செல்வாக்கு, ஆடம்பரம் அனைத்தும் அழிந்துபோகும். இங்கு பணபலத்தோடு வாழ்ந்த செல்வந்தர், இறுதிநாளில் எரிநரகத்தில் தள்ளப்பட்டு, அங்கு ஒரு சொட்டுத் தண்ணீருக்காகக் கதறும் காட்சியைக் கற்பனை செய்துபாருங்கள் (லூக் 16:24). இந்நிலை, இவ்வுலகின் மிகப்பெரிய மனிதர்கள் என எண்ணிக்கொண்டிருக்கும் பலருக்கும் நேரிடக்கூடும். ஆகவே, ஆண்டவர் முன் நம்மைத் தாழ்த்துவோம்.

மனத்தாழ்மை என்ற சிந்தனையை விளக்க இயேசு கிறிஸ்து உவமை ஒன்றையும் லூக் 18:9-14) சொல்லியிருக்கிறார். இருவர் இறைவனிடம் வேண்டக் கோவிலுக்குச் சென்றனர். ஒருவர் பரிசேயர், மற்றவர் வரிதண்டுபவர். பரிசேயர் திருச்சட்டத்தையும், சமயக் கடமைகளையும் ஒழுங்குமுறைகளையும் நன்கு அறிந்தவர். ஆகவே, அவற்றைப் பின்பற்றி பல நன்மைகளைச் செய்து வந்தார். ஆகையால், பெருமை கொண்ட மனநிலையோடு, கடவுளே 'நான் இந்த வரிதண்டுபவரைப் போல இல்லாதது பற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன் என்று வேண்டினார். இரண்டாவது நபர் வரிதண்டுபவர் இவர் எல்லோராலும் வெறுக்கப்பட்டவர். ஆகவே, அவர் தொலைவில் நின்றுகொண்டு வானத்தை அண்ணாந்து பார்க்கக்கூடத் துணியாமல் தம் மார்பில் அடித்துக்கொண்டு, கடவுளே பாவியாகிய என் மீது இரங்கியருளும் என்று தன்னைத் தாழ்த்திக் கொண்டார். இயேசு, 'பரிசேயரல்ல, வரிதண்டுபவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார். ஏனெனில், தம்மைத்தாமே உயர்த்துவோர் தாழ்த்தப் பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

> தாழ்ச்சி நாம் அணிய வேண்டிய ஆபரணம்
> விட்டுவிடக் கூடாத பொக்கிஷம்

மீட்பின் விலையைத் தன்னால் செலுத்த முடியாது என்பதை எந்த ஒரு மனிதன் உணர்கிறானோ அவனால் மட்டுமே தம் நம்பிக்கை முழுமையையும் இயேசு கிறிஸ்துவின்மேல் வைக்க முடியும். இறைச்சமூகத்தில் தம்முடைய வெறுமையையும் ஒன்றுமில்லாமையையும் உணர்ந்து ஒப்புக்கொள்ளும்போதுதான் இறை அருளைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே, இறைவனைச் சார்ந்து வாழும் வாழ்க்கையே மனத்தாழ்மை 'சிறு பிள்ளைகளைப் போலத் தம்மைத் தாழ்த்திக்கொள்ளாவிடில் விண்ணரசில் புக முடியாது' (மத் 18:3,4).

புனித பவுல் 'பாவிகளுள் முதன்மையான பாவி' (1 திமொ 1:15) என்றும் 'நான் திருத்தூதர்களிடையே மிகச் கடையவன்' (1 கொரி 15:9) என்றும் தன்னைத் தாழ்த்திக் கொண்டார். தம்முடைய உயர்ந்த படிப்பு, சமூகநிலை, அதிகாரம் அனைத்தையும் குப்பையாகக் கருதினார். இவற்றால் எந்தப் பயனுமில்லை. இவற்றைக் கொண்டு வாழ்வு பெற முடியாது என்பதை அறிந்து, அனைத்திற்கும் மேலாக ஆண்டவரையே சார்ந்து வாழக் கற்றுக்கொண்டார். ஆகையால், அனைத்திலும் ஆண்டவரின் அருள் அவருக்குப் போதுமானதாக இருந்தது. ஆகவே, பிற இனத்தாருக்கு நற்செய்தி அறிவிக்கவும், திருஅவையை கட்டி எழுப்பவும், பல திருமுகங்களை எழுதவும் பயன்படுத்தப்பட்டார். அவருடைய கைக்குட்டையும் அற்புதம் செய்யும் அளவுக்கு உயர்த்தப்பட்டார். ஆகையால், 'ஆண்டவர் முன் உங்களைத் தாழ்த்துங்கள் அவர் உங்களை உயர்த்துவார்' (யாக் 4:10).

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

'எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்'(எபே6:16)

புதிய ஆண்டை நமக்குப் பரிசாகத் தந்திருக்கின்ற ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம். இந்த ஆண்டு முழுவதும் கடவுளோடு நமக்குள்ள உறவில் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வோம். கடவுளோடு நமக்கு நெருக்கத்தை, உறவு ஒன்றிப்பை உருவாக்குவது நமது நம்பிக்கையே.

'நானே உன் கடவுளாகிய ஆண்டவர் உன் வலக்கையைப் பற்றி பிடித்து அஞ்சாதே உனக்குத் துணையாய் இருப்பேன் என்று உன்னிடம் சொல்பவரும் நானே' (எசா41:13). ஆண்டவர் நம் ஒவ்வொருவரின் வலக்கையையும் இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்றார் என்ற உறுதியான நம்பிக்கை நமக்கு வேண்டும். வாகன போக்குவரத்து நெரிசலான இடங்களிலோ, கூட்டங்கள் கூடுகின்ற இடங்களிலோ நாம் நம் குழந்தைகளை அழைத்துச் செல்லும்போது எப்படி அவர்களது கையை இறுகப்பற்றி பிடித்துக் கொண்டிருக்கின்றோமோ அதைப்போல்தான் நம் தந்தையும் நமக்கு ஆபத்து நேர்ந்து விடாதபடியும், நம் ஆன்மா அழிந்து போகாத படியும், உலக காரியங்களில் நாம் வெற்றியோடு வாழவும் நம்முடைய கரங்களையும் பற்றி பிடித்துக் கொண்டிருக்கிறார். இதை நாம் உறுதியாக நம்ப வேண்டும். அஞ்சாதே நான் உனக்குத் துணையாய் இருப்பேன் என்று சொல்பவரும் நானே என்கிறார். ஆண்டவர் நம் மீது எவ்வளவு ஆழமான அன்பும் அக்கறையும் கொண்டுள்ளார் பாருங்கள்.

நம் பிள்ளைகள் எதைக் குறித்தாவது பயப்படும்போது நான் உன்னோடு இருக்கிறேன். பயப்படாதே என்று பெற்றோர் அக்கறையோடு கரிசனையோடு கூறுவது போல ஆண்டவரும் நம் ஒவ்வொருவரையும் பார்த்து நான் உனக்கு துணையாய் இருப்பேன் என்று கூறுகிறதை தியானிக்கும் பொழுது ஒரு பெரிய ஆற்றல் நமக்குள்ளாய் இறங்குவதை அனுபவிக்கலாம். ஆண்டவருக்கு நம் மீது எவ்வளவு அக்கறையும் கரிசனையும் பரிவும் உள்ளது என்பதை நாம் நமது வாழ்வில் அனுபவமாக்க வேண்டும். இப்படிப்பட்ட அனுபவங்களை நமக்குத் தருவது நாம் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கைதான்.

'ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர்' (எசா40:31). நாம் நமது ஆன்மீக வாழ்விலும் உலக வாழ்விலும் ஆற்றல் குறைந்தவர்களாய், வலிமையற்றவர்களாக இருக்கின்றோம். பல நேரங்களில் இருப்பதற்கு நன்றி சொல்லாமல் இல்லாததை நினைத்து இஸ்ராயேல் மக்களைப் போல புலம்புகின்றவர்களாகவும் முறுமுறுப்பவர்களாகவும் இருக்கின்றோம். அதற்குக் காரணம் நம்மிடம் உள்ள நம்பிக்கை குறைவுதான். அனைத்தையும் ஆண்டவர் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை நம்மிடம் இல்லை. வலுவற்றவர்களாய் இருக்கின்ற நமக்கு ஆற்றல் தரக்கூடியவர் நம்மோடு இருக்கின்றார், நமக்குத் துணையாக இருக்கின்றார் என்ற ஆழமான நம்பிக்கை நமக்குள் வேரூன்ற வேண்டும். தாவரங்கள் எங்கே ஆழமாக வேரூன்றி இருக்கின்றதோ அங்கே அது செழுமையாகவும் அதிகக் கனிகள் கொடுப்பதாயும் இருக்கும். நாமும் செழுமையானவர்களாகவும் ஆண்டவர் முன்னும் மனிதர் முன்னும் கனி கொடுக்கிறவர்களாகவும் இருப்பதற்கு நாம் நம்பிக்கையில் வேரூன்றியவர்களாக இருக்க வேண்டும்.

'இறை நம்பிக்கை இல்லாத இடத்தில் தான் மூடநம்பிக்கைகள் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. பிரித்தெடுக்கப்பட்டு அழைக்கப்பட்டு நற்செய்தி பணி செய்கின்ற நம்மிடத்திலும் மூடநம்பிக்கைகள் ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். 'இவ்வுலகின் தெய்வம் நம்பிக்கை கொண்டிராதோரின் அறிவுக் கண்களை குருடாக்கிவிட்டது. எனவே அவர்கள் கடவுளின் சாயலாய் விளங்கும் கிறிஸ்துவின் மாட்சிபொருந்திய நற்செய்தி ஒளியைக் காண முடிவதில்லை'(2கொரி4:4) நம்முடைய நம்பிக்கை இன்மையைத்தான் அலகை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறான். இறைவார்த்தை ஒளியை நாம் கண்டுணர முடியாத வகையில் நம் அறிவுக் கண்களைக் குருடாக்கி வைத்திருக்கின்றான்.. அதனால் தான் இறைவார்த்தை காட்டும் ஒளியில் நாம் பயணிக்கத் தடுமாறுகின்றோம். குறிப்பிட்ட நாட்களையும் நேரங்களையும் மட்டும் இறை வேண்டலுக்குரியவை என்று நம்பிக் கொண்டிருக்கின்றோம்.

செவ்வாய்க்கிழமை அந்தோணியாருக்கு. வியாழக்கிழமை குழந்தை இயேசுவுக்கு. சனிக்கிழமை அன்னை மரியாவுக்கு என்று நாட்களையும் நேரங்களையும் ஒதுக்கி வைத்து அன்றைக்குத்தான் அவர்கள் வழியாக செபிக்க வேண்டும் என்ற தவறான நம்பிக்கையில் மூழ்கி இருக்கின்றோம். இதற்குக் காரணமாக இருப்பது நற்செய்தி ஒளியை நம்மிடமிருந்து மறைத்து வைத்திருக்கும் நமது நம்பிக்கையின்மையே.

கி.பி.2026 ஆம் ஆண்டிலாவது கிறிஸ்துவின் மாட்சி பொருந்திய நற்செய்தி ஒளியில் நடந்து நம்பிக்கையாளர்களாக வாழ முயற்சி செய்வோம். நான் வாழ்ந்தால் கிறிஸ்துவுக்காகவே என்ற உறுதிப்பாட்டை புதிய ஆண்டில் எடுப்போம். உலகின் மீதும் உலகு சார்ந்தவை அனைத்தின் மீதும் நம் கண்களையும் இதயத்தையும் செலுத்தும் போது நமக்கு நற்செய்தியின் ஒளியை அலகை மறைத்து விடுவான்.'நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையும் கடவுளுமானவர் போற்றி. அவர் விண்ணகம் சார்ந்த ஆவிக்குரிய ஆசி அனைத்தையும் கிறிஸ்து வழியாக நம் மீது பொழிந்துள்ளார்'(எபே1:3) என்பதை நாம் ஆழமாக நம்ப வேண்டும். ஊற்றுவது என்பது வேறு. பொழிவது என்பது வேறு. பொழிந்துள்ளார் என்ற வார்த்தையில் இருந்து நம்மை அளவுக்கதிகமான ஆசிகளால் நிரப்பியுள்ளார் என்பதைப் புரிந்து கொள்வோம். விண்ணகம் சார்ந்த ஆசிகளை நாடுவோர் கண்டிப்பாக நாள். நேரம். காலம். பணம். புகழ்.பெருமை இவற்றிலிருந்து தப்பியோடுவர். நாமும் இப் புதிய ஆண்டிலிருந்து இறை நம்பிக்கையாளர்களாய் கிறிஸ்துவின் மாட்சி பொருந்திய நற்செய்தி ஒளியைக் கண்டு அதன்படி வாழ்ந்து நாமும் ஒளி வீசி பிறருக்கு ஒளியூட்ட தூய ஆவியானவரின் துணைவேண்டி ஒவ்வொரு நாளும் செபிப்போம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

| **வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்** | |
|---|---|
| ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ. கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்: அக்குழந்தைக்கு அவள் 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார். | **எசாயா 7:14** |

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்**
www.arulchandrunilayam.org

# வட்டார தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 04 | செஞ்சை<br>942758641 | செயலர்<br>9787967272 |
| 2. | 04 | சி.கே. மங்கலம்<br>9626303365 | நற்பணி A. தனிநாயகம்<br>8825863861 |
| 3. | 04 | செக்காலை<br>9150579311 | நற்பணி M. மரிய கிரகோரி<br>9846965799 |
| 4. | 11 | மகிண்டி மிக்கேல்பட்டணம்<br>9524495693 | நற்பணி M. மரிய கிரகோரி<br>9846965799 |
| 5. | 25 | முத்துப்பேட்டை<br>9940745169 | நற்பணி A. சகாயராஜா<br>9443569152 |
| 6. | 11 | காளையார்கோவில்<br>9444712047 | செயலர்<br>9787967272 |
| 7. | 11 | கமுதி<br>9443210772 | நற்பணி A. தனிநாயகம்<br>8825863861 |
| 8. | 18 | சிவகங்கை<br>9943165532 | செயலர்<br>9787967272 |
| 9. | 18 | இராம்நகர்<br>9442959569 | நற்பணி M. மரிய கிரகோரி<br>9846965799 |
| 10. | 25 | இராமநாதபுரம்<br>9486037889 | நற்பணி A. சகாயராஜா<br>9443569152 |
| 11. | 11 | பரமக்குடி<br>9443503294 | நற்பணி A. சகாயராஜா<br>9443569152 |
| 12. | 25 | சாலைகிராமம்<br>8526754557 | செயலர்<br>9787967272 |

# இது சாத்தியமா ?

நாம் ஏதேனும் நல்ல செயல் செய்யும்போது 'இந்த நல்ல செயலை பிற மனிதர் யாருமே பார்க்கவில்லையே' என்ற எண்ணம் உங்களுக்கு வந்தது உண்டா? எனக்கு வந்தது உண்டு. இந்த நல்ல செயலை யாராவது பார்த்திருந்தால் நம்மைப் பாராட்டி இருப்பார்களே! நம்மைப் புகழ்ந்திருப்பார்களே! யாருமே பார்க்கவில்லையே என்ற ஏக்கத்தோடு கூடிய எண்ணங்கள் என் உள்ளத்தில் எழுந்ததுண்டு.

சீரா.39:19 -ல் 'எல்லா மனிதர்களின் செயல்களும் அவர் திருமுன் இருக்கின்றன' என்று வாசிக்கிறோம்.

மனிதப் புகழ்ச்சியால் நமக்கு எந்த ஒரு பயனும் கிடைக்கப் போவதில்லை. கடவுள் நம்மைப் புகழ வேண்டும். நாம் செய்யும் நல்ல ஆனால் மறைவான செயல்கள் கடவுளுக்கு மறைவானது அல்ல. அதைக் கண்டு மகிழ்கிறார் என்பது எனக்கே சாத்தியமானால் உங்களுக்கும் சாத்தியம்தானே!

-நற்பணி **J. அருள் இளங்கோ,** இராம் நகர்.

ஏதாவது ஒருகுறை எல்லா மனிதர்களிடமும் இருக்க வேண்டுமென்று அலகை தன்னால் இயன்ற அளவு முயலும். அனைத்து குறைகளையும் போக்கி அவனது பிடியில் இருந்து விடுபடாமல் இருக்க அவனுக்குத் தெளிவான திட்டங்கள் இருக்கும். ஆகையால். இறுதி நிலையில் அவன் அடிமைப்படுத்தும் பிடி இருக்கமாக இருக்கும்.

லூக்கா நற்செய்தியில் இயேசுவைத் தேடி ஒரு இளைஞன் சென்றார் (லூக் 18:18-24) நிலைவாழ்வைத் தேடி அந்த இளைஞன் இயேசுவை நாடுகிறார். இயேசுவைக் குறித்து பிறர் சொல்லக் கேட்ட அறிவை வைத்துக் கொண்டு சென்றிருக்க வேண்டும். "அவன் நல்ல போதகரே. நிலை வாழ்வை உரிமையாக்கிக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று அவரைக் கேட்டார். அதற்கு இயேசு அவரிடம், "கட்டளைகளை கடைபிடி என்றார். அப்போது இயேசு அன்பொழுக அவரைக் கூர்ந்து நோக்கி, "உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. நீர் போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்று அவரிடம் கூறினார். இயேசு சொன்னதைக் கேட்டதும் அவர் முகம்வாடி வருத்தத்தோடு சென்று விட்டார். ஏனெனில், அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது. இயேசு சீடரிடம், "செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும் கடினம்" என்றார். இயேசு அவர்களைப் பார்த்து, பிள்ளைகளே, செல்வர்கள் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும் கடினம் என்றும் கடவுளால் எல்லாம் இயலும்" என்று இறையாட்சியின் பாதையைக் குறித்து இயேசு தெளிவான விளக்கம் கூறுகிறார் (மாற்கு 10: 17-27).

'இறுதிப்படிக்கட்டு மிகப்பெரியது' என ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உள்ளது. உலகை விட்டு இறைவனை அடைகின்ற இறுதிப்படிக்கட்டு பாவம் அனைத்தையும் போக்கி தடைகள் அனைத்தையும் தாண்டி விடுதலை பெறுகின்ற இடம். அங்கேதான் சாத்தான் குறுக்கிடுவான். செல்வர் வருத்தத்துடன் படிக்கட்டிலிருந்து இறங்குவர்; அர்ப்பணமும் வழிமாறும்; துறவறமும் தூரமாகும்; தம்பதியரும் தடுமாறுவர். இறுதிப் படிக்கட்டில் தேங்கி நிற்பவர்களும் தோற்றவர்களும் அதிகம். வெற்றிவாகை சூடியவர்கள் மிகச்சிலர். பல புனிதர்கள் இயேசுவின் கரம் பிடித்து படிக்கட்டைக் கடந்து வெற்றியடைந்துள்ளனர். இறுதிப் படிக்கட்டில் செய்வதறியாது நின்ற புனித பவுலின் அனுபவம் நாம் அனைவரும் அறிந்தல்லவா? என்னைத் துன்பப்படுத்தின சாத்தானின் தூதன் என்னை விட்டுப்போக நான் மூன்றுமுறை ஆண்டவரிடம் வேண்டிக்கொண்டேன். என்கிறார் (2கொரி 12:7). நாமும் இறுதிப்படிக்கட்டில் நிற்கலாம். செபித்து அலகையை வெற்றி பெறுவோம்.

நற்பணி **செபஸ்டின் தார்சிஸ்,** செஞ்சை

# நமக்கோர் விண்மீன்

'எருசலேமே! எழுந்திரு! எழுந்து ஒளிவீசு! உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன் மேல் உதித்துள்ளது' (எசா 60: 1). இது இருளிலும் இறப்பின் பிடியிலும் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கான விடியல் செய்தி. ஒளியின் அழைப்பு. மெசியாவின் வருகையில் பெறப்போகும் மீட்புக்காக காத்திருந்த மக்கள் ஒருபுறம். 'யூதா நாட்டு பெத்லகேமில் பிறக்கவிருக்கும்' மெசியாவின் வருகையை ஆராய்ந்து கொண்டிருக்கும் மறைநூல் அறிஞர்கள் கூட்டம் மறுபுறம். பிறந்துவிட்டால் தமது ஆடம்பர, அதிகார வாழ்க்கை என்னாகுமோ என்கிற திகிலில் அரசர்கள் ஒருபுறம். வான் நட்சத்திரங்களையும் ஆராய்ந்து மெசியாவின் பிறப்பை உறுதி செய்து அவரைக்காணப் புறப்பட்ட ஞானிகள் மறுபுறம். 'சீடர் தயாராகி விட்டால் அவரின் குரு வந்து விடுகிறார்' என்ற ஒரு கூற்று இருக்கிறது. இதோ வானில் மெசியாவின் வருகையை அடையாளப்படுத்தும் விண்மீன் தோன்றிவிட்டது. இறைமகனும் பிறந்து விட்டார்.

**ஆவலும், முயற்சிகளும்....:**

தூய்மையான உள்ளத்தினர் பேறு பெற்றோர்: ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்' (மத் 5:8) என்கிறார் இயேசு. ஞானிகளின் தூய உள்ளமும் , அன்பார்வமும், பேராவலும், முயற்சிகளும் இயேசுவை அடைய முக்கிய கூறுகளாயின. விண்மீன் அவர்களுக்கு வழிகாட்டியது. அவரைக் காண வேறு வேறு நாடுகளிலிருந்து கிளம்பி விண்மீன் என்ற வழிகாட்டுதலில் ஒன்றிணைகின்றனர் ஞானிகள்.

'விடியலுக்காய் காத்திருக்கும் காவலரை விட, அவர்களின் நெஞ்சம் நம் தலைவருக்காய் ஆவலுடன் காத்திருந்து' (திபா 130:6). இயேசு என்ற மையத்தை நோக்கி பயணித்தது. 'கலைமான்கள் நீரோடையை' தேடிச் செல்வது போன்ற (ஆன்ம) தாகத்தோடு தேடிய நெடிய பயணம்.

நமது கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமே இறைவனை எளிய மனிதர்களில் காண்பதும், இறுதியில் இறைபதம் சேர்ந்து அவரின் பிரசன்னத்தில் நிலையான நிறை மகிழ்ச்சியோடு வாழ்வதுதான். இது அதற்காகவே கொடுக்கப்பட்ட வாழ்வு. 'ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள். அவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள்' என்கிறது திருப்பாடல் வார்த்தை. இறைவனை அடைய நமக்கு வழிகாட்டும் விண்மீன் எது? இறைவார்த்தை என்ற விண்மீன், இறைச் செய்திகள் என்ற விண்மீன், புனிதர்கள் என்கிற விண்மீன்கள், கடவுள் மனிதருக்கு கொடுத்திருக்கும் மனச்சான்று என்ற விண்மீன் எல்லாவற்றுக்கும் மேலாக தூய ஆவியானர் வழிகாட்டுதல் என்கிற ஒளி இவர்களெல்லாம். இவையெல்லாம் நம்மை கடவுளிடம் கொண்டு சேர்க்கும் வாய்கால்களாகும். வழிமுறைகளும் அவைதான். 'என்னை ஆவலுடன் தேடுவோர் கண்டுபிடிப்பார்கள்' இது ஞானத்தின் வழியான இறை தேடல். இவற்றில் எந்த படிகளில் நாம் நிற்கிறோம்? எண்ணிப் பார்ப்போம். இறைவனை நோக்கிய தேடல் தொடரட்டும். தேடினால் கண்டடைவோம் அல்லவா!

**விழிப்புணர்வு:**

'யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக்கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்' (மத் 2:2) எளிய மாட்டுத் தொழுவத்தில்

பிறந்தவரை ஞானிகள் மன்னர் மாளிகையில் தேடுகிறார்கள். தவறான இடம் என்று தோன்றினாலும் இறைவாக்குகள் நிறைவேறவே (எரே 31:15) இந்த சந்திப்பு. மீட்புத்திட்டத்தை அழிக்க நினைத்த ஏரோதின் எண்ணம் அறியாமல் மீண்டும் பெத்லகெமிற்கு புறப்பட மீண்டும் விண்மீனின் வழிகாட்டுதல் தொடருகிறது. (கடவுளின் விண்மீன் மறைந்து போனது காலை நேரமாக இருந்திருக்கலாம்.) ஒளிநோக்கிய பயணத்தில் ஞானிகள் சந்தித்த தீமையின் ஆதிக்கம் கொண்ட ஏரோதின் மனதை அறிய முடியாது போன இருள் நிறைந்த இடமும் அதுவே.

'திறந்த உள்ளத்தோடு எல்லாரிடமும் பேசாதே' (சீஞா 8:19) என்று எச்சரிக்கிறது ஞானநூல். திறந்த உள்ளத்தோடு அனைவரிடமும் பேசுவது தவிர்க்க வேண்டிய ஒன்றாகும். பின்னாட்களில் இயேசுவும் தம் சீடர்களிடம் பாம்புகளைப் போல முன்மதியுடையவர்களாய் இருக்கச் சொன்னதும் இதன் அடிப்படையிலேதான் இருந்திருக்க வேண்டும். 'வலியோரின் ... நீண்ட பேச்சுகளை நம்பாதே. உன்னை ஆழம் காணவே அவர்கள் நீண்ட நேரம் பேசுகிறார்கள். அவர்கள் சிரித்துப் பேசுவதும் உன்னைக் கணிப்பதற்கே' (சீஞா 13:11) இந்த வார்த்தை கடவுளை நோக்கிய நமது பணிப் பயணத்தில் நினைவில் நிறுத்த வேண்டிய ஒன்று.

'தூயவற்றை ஆண்டவர் தூய்மை அல்லாவற்றினின்று பிரித்து வைக்க வல்லவர்' (சீஞா 18:3). மீண்டும் விண்மீன் வழிகாட்ட அங்கிருந்து ஒளியின் பாதையில் வழிநடத்திச் செல்கிறார்.

நம்மை எச்சரிக்கும் மனச்சான்று இது சரியில்லையே என்று தோன்றச் செய்யும். தூய ஆவியானவரின் வெளிப்பாடு தீமையை விட்டு விலகிப்போக மெல்லியதாய் நம் இதயத்தோடு பேசிப் புரிய வைக்கும் . அதுவே விண்மீன் ... நமக்கு ஒளியை அளித்து வழிநடத்தும் விண்மீன். இறைவேண்டுதல் என்கிற உள்ளொளி எல்லாவற்றையும் விலக்கி நம்மைக் காக்கும். கடவுளை நோக்கி நடத்திச் செல்லும்.

**இலக்கை அடைதல்:**

அரச மாளிகையிலிருந்து வந்த ஞானிகளுக்கு மீண்டுமாய் விண்மீன் வழிகாட்ட குழந்தையாய் பிறந்திருந்த இயேசுவைக் கண்டார்கள். மட்டில்லா பெரு மகிழ்ச்சி அவர்களை ஆட்கொண்டது. (அவரது முன்னிலையில் நிறைவான மகிழ்ச்சி மட்டும்தானே. அவரது வலப்புறம் பேரின்பம் தானே)

'எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக 'பிறந்திருந்த இயேசு பாலகனை ஞானிகள் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து குழந்தையை வணங்கினார்கள். இறைமகனாய் இருந்தும் மானிடமகனாகப் பிறந்த இயேசுவின் தாழ்ச்சியும், தாழ்ச்சியின் அடையாளமான அந்த ஏழ்மை குடில், தாழ்ச்சியின் நிறைவாய் தாய் மரியா, எந்நிலையிலும் தம்மை முன்னிலைப்படுத்தாமல் இறைத்திருவுளம் நிறைவேற்ற கடவுளையே முன்னிலைப் படுத்தி வாழ்ந்த வளர்ப்புத் தந்தை யோசேப்பின் தாழ்ச்சி, இவர்களுடன் ஞானிகளின் தாழ்ச்சியையும் தமக்குள் தாங்கி நின்றது. அந்த மகத்துவம் நிறைந்த இடம் தாழ்ச்சியினால் ஒளிமயமானது.

இயேசுவைக் கண்டு பணிந்த பண்பின் உயர்வினால்தான் இன்று மட்டும் திரு அவை ஞானிகளுக்குத் தனிப்பெரும் விழா எடுத்து கொண்டாடி மகிழ்கிறது.

'எவ்வளவுக்கு நீ உயர்நிலையில் இருக்கிறாயோ அவ்வளவுக்குப் பணிந்து நடக்கச் சொல்கிறது இறைவார்த்தை (சீஞா 3:18) தம்மைத்தாமே தாழ்த்துகிறவர்கள்

உயர்த்தப்படுவார்கள் என்பது நம் இயேசுவின் கூற்று. அவர் சொன்னது மட்டுமல்லாமல் செய்து காட்டி பணி வாழ்வின் அடித்தளத்தை உணர்த்திச் சென்றது நம் நினைவை விட்டு நீங்காதிருக்கவே ஆகும்.

'தர்சீசு அரசர்களும் தீவுகளின் அரசர்களும் காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள்... எல்லா அரசர்களும் அவர் முன் தரைமட்டும் தாழ்ந்து வணங்குவார்கள்' (திபா 72:10,11) என்கிற திருப்பாடல் வார்த்தைகள் நிறைவேறிய தருணம் உன்னதமானது. இயேசுவின் பிறப்பின் மறைபொருளை உலகிற்கு உணர்த்தும் அடையாளங்கள் அவை. ஞானிகள் தங்களது பேழைகளைத் திறந்து அவர் (அமைதியின் ) அரசர் என்பதை அடையாளப்படுத்த பொன்னும் (வலிமைமிகு இறைவன்) என்பதால் சாம்பிராணியும், துன்புற்று மீட்பைத் தரவிருக்கும் மெசியா என்பதால் வெள்ளைப்போளமும் காணிக்கையாக்கி மகிமைப் படுத்துகின்றனர். மனநிறைவடைந்தனர்.

நமது காணிக்கை நமது தூய்மையான அன்புமிகுந்த வாழ்வாக ஆற்றல் மிகு பணியாக இருக்குமானால் இறைவன் நம்மில் மகிழ்வார் என்பது உறுதி. 'கடவுளுக்கு உகந்த தூய, உயிருள்ள பலியாக' (உரோ 12:1) நம்மைப் படைப்பது நாம் செய்யும் உள்ளார்ந்த வழிபாடுகள் உயரிய காணிக்கையுமாகும்.

தம்மை ஆவலாய் கண்டு பணிந்து காணிக்கையளித்து திரும்பப்போகும் ஞானிகளுக்கு 'ஏரோதிடம் திரும்பிப்போக வேண்டாம்' என்ற எச்சரிக்கை கனவில் கொடுக்கப்படுகிறது. ' தம் அடியாரின் வழிகளை காவல் செய்கிறவர்' (நீமொ 1:8) அவர் அல்லவா? கடவுள் தமக்கு என்று தேர்ந்தெடுத்து பயன்படுத்துகிறவர்களை கண்ணின் மணி போல் தாங்கி தம் கரங்களில் பொதித்து வைத்து காத்து வருபவர் என்பதை விவிலியத்தில் பல இடங்களில் வாசித்திருக்கிறோம். அதுதான் ஞானிகளின் வாழ்விலும் நடந்தது. திருத்தூதர்களை இங்கு போ, அங்கு போகாதே, இதை செய் , இதை செய்யாதே என்று உணர்த்தி வழிகாட்டிய தூய ஆவியானவர் இன்றும் என்றும் நம்மோடு நமக்குள் தான் இருக்கிறார். மன அமைதியில் அவரின் மெல்லிய ஒலியைக் கேட்கலாம். ஒளியின் பாதையில் வலிமையோடு நடக்கலாம்.

இறைவனை அடையும் வழி இடுக்கமானது; கரடுமுரடானது; கற்களுக்கும் முட்களுக்கும் பஞ்சமிராது. தீயவர்களுக்கும் சூழ்ச்சி நிறைந்தவர்களும் நிறைந்த இவ்வுலகில் இறைவனைச் சென்றடைய நமக்கான விண்மீனைக் கண்டுபிடிப்போம். அது இறைவார்த்தையா ? புனிதர்களா? நமது தூய மனச்சான்றா ? எது என்ற தெளிவைப் பெறுவோம் எல்லாவற்றும் மேலாக தூய ஆவியானவரின் துணை வேண்டுவோம். அந்த ஒளியின் பிரகாசத்தில் இறைவனை அடைவோம். அனைத்து மக்களையும் ஒளிர்விக்கும் ஒளி கடவுள் மட்டும்தானே. 'எல்லா மக்களுக்கும் பெரு மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக, இருளிலும் இறப்பின் பிடியிலும் இருந்தவர்களை ஒளிர்விக்கும் பேரொளியாய் 'பிறந்த நம் இயேசுவையும் அவரின் வார்த்தைகளையும் இறுகப்பற்றிக்கொள்வோம். மட்டில்லா பெருமகிழ்ச்சி பெறுவோம். அந்த மகிழ்ச்சியில், விடுதலையை அளிக்கும் விண்மீன்களாய் சுடர்விடுவோம். இப்புதிய ஆண்டு ஆண்டவரின் இறை நெருக்கத்தை அளிக்கக்கூடிய ஆண்டாக அனைவருக்கும் அமையட்டும்.

நற்பணி **ஜெஸி. P.**

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 03.01.26 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம். இடைக்காட்டூர் |
| 04.01.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | பரமக்குடி. காளையார்கோவில்<br>புதுக்கோட்டை. கோட்டைக்காடு |
| 07.01.26 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமலஅன்னை அமைதியகம். காயாவயல்.<br>அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 10.01.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில். தங்கச்சிமடம் |
| 11.01.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில். இராமநாதபுரம்<br>வியான்னி அருள்பணி மையம். சிவகங்கை<br>புனித அருளானந்தர் கோவில். ஓரியூர்<br>உலக இரட்சகர் கோவில். பட்டுக்கோட்டை<br>புனித மரியன்னை கோவில். பூதலூர் |
| 11.01.26 | தொடர் களப்பணி | எழுவன்கோட்டை கிராமம்.<br>இராம்நகர் பங்கு. பூரண மங்கலம் கிராமம்.<br>சாயல்குடி. நானாக்குடி பங்கு.<br>அமல அன்னை அமைதியகம். காயாவயல் |
| 18.01.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித ஆரோக்கிய அன்னை ஆலயம். சாயல்குடி<br>புனித பேதுரு கோவில். சி.கே. மங்கலம்<br>புனித லூர்தன்னை கோவில். அம்மாபேட்டை<br>புனித அடைக்கல அன்னை கோவில். திருமயம்<br>புனித பாத்திமா அன்னை கோவில். திருவாரூர் |
| 25.01.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | குழந்தை இயேசு கோவில். நமணசமுத்திரம்<br>தூய ஆவியார் கோவில். இராஜசிங்கமங்கலம் |
| 26.01.26 | நற்பணி பால்ராஜ்- நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி இல்ல திருமண உறுதிப்படுத்தும் விழா | இராம்நகர் |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

ஒவ்வொரு புது ஆண்டும் புதிய நாட்களைத் தருகின்றன.
அதைக்கொண்டு நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது தான்
நமக்கு முன்னே உள்ள கேள்வி.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

ஆண்டு முழுவதும் உமது நலத்தால் முடிசூட்டுகின்றீர்; உம்முடைய வழிகள் எல்லாம் வளம் கொழிக்கின்றன. (திருப்பாடல்கள் 65:11)

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 04.01.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி A. அடைக்கலம் |
| 04.01.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி X. சகாய லூயி ஆரோக்கியசாமி<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 10.01.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி |
| 11.01.26 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி பெ. தெரசா மிரண்டா |
| 11.01.26 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி GMS. ராணி |
| 11.01.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி கோ. அம்பிகா எலியாஸ்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 18.01.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. செலின் பிரபா<br>நற்பணி A. ஜான்சிமேரி |
| 18.01.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி M. அருள் மரியநாயகம் |
| 18.01.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி J. சார்லஸ்<br>நற்பணி A. சகாய தமிழ்செல்வி |
| 25.01.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி S. தைனஸ் மேரி |

## ஒரு பணியாளரின் மன்றாட்டு



புதுப் பிறப்பளிக்கும் நீரினாலும் புதுப்பிக்கும் தூய ஆவியாலும் எம்மை மீட்டவரே இறைவா! (தீத் 3:5).
புதியது என்று உலகில் எதுவுமே இல்லை (சஉ 1:9) என்ற போதிலும், எங்களை மீண்டும் ஒரு புதிய ஆண்டைக் காணச் செய்ததற்காக நன்றி.

எங்களுக்குப் புதிய ஆற்றலைத் தந்து (எசா 40:31).புதிய கூர்மையான போரடிக்கும் கருவியாக மாற்றி (எசா 41:15)மன்னிக்கின்ற, சதையாலான புதிய இதயத்தோடு (எசே 36:26) புதிய உடன்படிக்கையின் பணியாளராக வாழும் (2கொரி 3:6) மனநிலையை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறேன்.

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 04.01.26<br>I | திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>9489275861<br>நற்பணி GMS. ராணி<br>9655264448 |
| 04.01.26<br>I | புனித சூசையப்பர் கோவில் கோட்டைக்காடு | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206<br>நற்பணி தை. அமல்ராஜா<br>9443983519 |
| 11.01.26<br>II | புனித மரியன்னை கோவில் பூதலூர் | நற்பணி S. அந்தோணிபிரகாஷ்<br>9787791869<br>நற்பணி A. ஆரோக்கியசாமி<br>9787037717 |
| 11.01.26<br>II | புனித வளனார் கோவில் அம்மாபேட்டை | நற்பணி A. சத்தியேந்திரன்<br>9787791869<br>நற்பணி A. ஆரோக்கியசாமி<br>9843323439 |
| 18.01.26<br>III | அடைக்கல மாதா கோவில் திருமயம் | நற்பணி S. அந்தோணிபிரகாஷ்<br>9787791869<br>நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ<br>9443503618 |
| 18.01.26<br>III | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>950579311<br>நற்பணி J. ஆரோக்கியசாமி<br>943157260 |
| 25.01.26<br>IV | புனித பாத்திமா அன்னை கோவில், திருவாரூர் | நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600<br>நற்பணி S. ஹென்றி<br>943983519 |
| 25.01.26<br>IV | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி A. சகாயராஜா<br>943569152<br>நற்பணி S. சகாயராணி<br>9047495319 |

# புனித ஆஞ்சலா மெர்சி (சனவரி 27)



புனித ஆஞ்சலா மெர்சி இத்தாலில் உள்ள டெசன்சானோ என்னும் இடத்தில், கி.பி 1470 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 21 ஆம் நாள் பிறந்தார். சிறுவயது முதலே மிகுந்த பக்தியோடு வளர்ந்த இவருக்கு சகோதரி ஒருவரும் இருந்தார். ஆஞ்சலாவிற்கு பத்து வயது நடக்கும்போது அவருடைய பெற்றோர் அவரை விட்டுப் பிரிந்து சென்றனர். இதனால் அவர் தன்னுடைய சகோதரியுடன் சேர்ந்து சலோ என்னும் இடத்தில் இருந்த தன்னுடைய மாமாவின் வீட்டில் இருந்து வளர்ந்து வளர்ந்தார். ஒருசில ஆண்டுகளில் அவருடைய மாமாவும் சகோதரியும் இறந்தார்கள். ஆதரவற்ற நிலையில் ஆஞ்சலாவின் வருத்தமெல்லாம் தன்னுடைய சகோதரி நோயில் பூசுதல் என்ற அருட்சாதனத்தைப் பெறாமலே இறந்துபோனதால், அவர் விண்ணகத்தில் இருப்பாரா? அல்லது நரகத்தில் இருப்பாரா? என்பதாகத்தான் இருந்தது. இதனால் அவர் செபத்தில் இயேசுவிடம், தன்னுடைய சகோதரி எங்கே இருக்கின்றார் என்று கேட்டுக்கொண்டே இருந்தார். ஒரு குறிப்பிட்ட நாளில் இயேசு அவருக்குக் காட்சி கொடுத்து, 'ஆஞ்சலா! உன்னுடைய சகோதரி விண்ணகத்தில், இறைவனின் திருமுன் எப்போதும் மகிழ்ந்திருக்கின்றார். அதனால் நீ அவளைக் குறித்து கவலைப்படதே' என்று சொல்லிவிட்டு மறைந்தார். அதன்பிறகுதான் ஆஞ்சலா நிம்மதி அடைந்தார்.


ஆஞ்சலா மீண்டும் டெசன்சோனாவில் இருந்த தன்னுடைய சொந்த வீட்டிற்கு வந்தார். அங்கே நிறைய குழந்தைகள் போதிய கல்வி அறிவில்லாமலும் கிறிஸ்துவைப் பற்றிய அறிவில்லாமலும் இருந்ததைக் கண்டு, அவர்களுக்காக தன்னுடைய இல்லத்தில் ஒரு பள்ளிக்கூடத்தை அமைத்தார். அதன்மூலம் அங்கு வந்த குழந்தைகளுக்கு மறைக்கல்வியையும் அடிப்படைக் கல்வியையும் கற்றுக்கொடுத்து வந்தார்.

ஆஞ்சலா செய்துவந்த இத்தகைய சேவையினைப் பார்த்துவிட்டு அவரோடு நிறையப் பெண்கள் சேர்ந்தார்கள். ஒரு சமயம் அவர் புனித நாடுகளுக்கு திருப்பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது கிரீட் என்னும் நகரை அவர் அடைந்தபோது மேலிருந்து விழுந்த சீழ் அவருடைய கண்களில் விழுந்து, கண்களைக் குருடாக்கியது. அவரோடு

இருந்தவர்கள் திருப்பயணத்தை ரத்துசெய்து திரும்பிவிடலாம் என்று சொன்னார்கள். ஆனால் அவரோ, 'அப்படியெல்லாம் செய்யவேண்டாம், நம்முடைய முயற்சியைக் கைவிடாமல், தொடர்ந்து போவோம், வருவதைப் பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்லிக்கொண்டு புனித நாடுகளுக்குப் போனார். வழியில் அவருக்கு எந்த இடையூறும் ஏற்படவில்லை. புனித நாடுகளுக்குச் சென்றுவிட்டு மீண்டுமாக அவர் கிரீட் நகர் வழியாக வந்தபோது, எந்த இடத்தில் அவருக்கு கண்பார்வை போனதோ, அந்த இடத்தில் அவர் சிலுவையைக் கையில் ஏந்தி செபித்தார். மீண்டும் அவருடைய கண்பார்வை கிடைத்தது.

கி.பி 1535 ஆம் ஆண்டு, 28 ஏழைக் குழந்தைகளுக்கு சமய மற்றும் அடிப்படைக் கல்வியைப் புகட்டுவது நோக்கமாக கொண்டு பெண் துறுவற சபையை ஆராம்பித்தார். 1540 ஆம் ஆண்டு, விண்ணப்பிறப்படைந்த இவருக்கு 1807 ஆம் ஆண்டு புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது.

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.




ஆலோசகரின் நுண் திறன்கள் (Microskills) என்பவை, ஆலோசனை அமர்வின்போது வாடிக்கையாளருடன் திறம்படத் தொடர்புகொள்ளவும், அவர்களுக்கு உதவவும், உறவை உருவாக்கவும் ஆலோசகருக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட, கவனிக்கத்தக்க திறன்களின் தொகுப்பாகும். உளவியல் ஆலோசகரின் நுண் திறன்கள் (Microskills) பற்றி சுருக்கமாக பார்த்தோம். கடந்த பகுதியில் முழுமையாகக் கவனிக்கும் திறன்/நடத்தை [Attending Behavior) பற்றி பார்த்தோம் இந்த பகுதியில் கேள்வி கேட்டல் திறன்' (Questioning Skill) பற்றி இப்பகுதியில் மிக தெளிவாக பார்ப்போம்.

உளவியல் ஆற்றுப்படுத்துதலில் (Counseling) நுண் திறன்கள் (Micro- skills) என்பது ஆலோசகர் (Counselor) மற்றும் பயனாளிக்கு (Client) இடையே ஒரு நல்ல உறவை உருவாக்கவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும் பயன்படும் அடிப்படைத் திறன்களாகும்.

இதில் 'கேள்வி கேட்டல் திறன்' (Questioning Skill) மிக முக்கியமானதாகும். இது பயனாளியின் மனதில் உள்ள எண்ணங்களை வெளிக்கொண்டு வரவும், பிரச்சினையின் ஆழத்தைப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

இதனைப் பற்றிய தெளிவான விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**கேள்வி கேட்டல் திறனின் வகைகள்**

ஆற்றுப்படுத்துதலில் கேள்விகளைப் பிரதானமாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம்:

**1. திறந்த கேள்விகள்** (Open-ended Questions)

இவை பயனாளியை விரிவாகப் பேசத் தூண்டும் கேள்விகள் ஆகும். இதற்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொல்ல முடியாது.

**நோக்கம்:** பயனாளியின் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் அனுபவங்களை விரிவாக அறிய உதவுதல்.

**எப்படி தொடங்கும்?:** 'என்ன' (What), 'எப்படி' (How), 'விளக்க முடியுமா' (Could you explain) போன்ற சொற்களில் தொடங்கும். உதாரணம்:

'இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'

'அந்தச் சூழ்நிலையை நீங்கள் எப்படி கையாண்டீர்கள்?'

'உங்கள் குடும்பத்தைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்ல முடியுமா?'

**முக்கிய குறிப்பு:** திறந்த கேள்விகளே ஆற்றுப்படுத்துதலுக்கு மிகவும் சிறந்தவை. ஏனெனில், இவை பயனாளியைச் சுதந்திரமாகப் பேச அனுமதிக்கின்றன.

**2. மூடிய கேள்விகள்** (Closed-ended Questions)

இவை குறிப்பிட்ட தகவல்களை மட்டும் அறிந்துகொள்ளப் பயன்படும் கேள்விகள். இதற்குப் பெரும்பாலும் 'ஆம்', 'இல்லை' அல்லது மிகச்சிறிய பதில் மட்டுமே கிடைக்கும்.

**நோக்கம்:** குறிப்பிட்ட உண்மைகளை உறுதிப்படுத்தவும் (Fact checking), உரையாடலை ஒருமுகப்படுத்தவும் உதவும்.

**எப்படி தொடங்கும்?:** 'இருக்கிறதா' (Is/Do/Did), 'எப்போது' (When), 'எங்கே' (Where) போன்ற சொற்களில் தொடங்கும். உதாரணம்:

'உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?' 'நீங்கள் நேற்று அங்கே சென்றீர்களா?' 'உங்கள் வயது என்ன?'

**கேள்வி கேட்டலின் முக்கிய நோக்கங்கள்:**

சரியான முறையில் கேள்வி கேட்பது பின்வரும் நன்மைகளைத் தரும்:

**1. உரையாடலைத் தொடங்குதல்:** பயனாளி தயக்கத்துடன் இருக்கும்போது, அவரைப் பேச வைக்க இது உதவும். **2. தகவல் சேகரிப்பு:** பிரச்சினையின் பின்னணி, தீவிரம் மற்றும் பயனாளியின் மனநிலையைத் துல்லியமாக அறிய உதவும். **3. தெளிவுபடுத்துதல்** (Clarification): பயனாளி கூறிய கருத்து புரியாதபோது அல்லது குழப்பமாக இருக்கும்போது, அதைத் தெளிவுபடுத்திக்கொள்ள உதவும்.

**4. கவனத்தைத் திருப்புதல்:** தேவையற்ற கதைகளைப் பேசுவதைத் தவிர்த்து, முக்கியப் பிரச்சினையில் கவனத்தைச் செலுத்த உதவும்.

**கேள்வி கேட்கும்போது கவனிக்க வேண்டியவை** (Dos and Don'ts)

ஒரு சிறந்த ஆற்றுப்படுத்துநர் கேள்விகளைக் கேட்கும்போது சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்:

'ஏன்' (Why) என்ற கேள்வியைத் தவிர்க்கவும்: பெரும்பாலும் 'ஏன் இதைச் செய்தீர்கள்?' என்று கேட்பது பயனாளியைக் குற்றம் சாட்டுவது போல் (Accusatory tone) உணர வைக்கும். அதற்குப் பதிலாக, 'எது உங்களை இப்படிச் செய்யத் தூண்டியது?'

(What made you do that?) என்று கேட்கலாம். ஒரே நேரத்தில் பல கேள்விகள் கேட்கக் கூடாது:

'நீங்கள் அங்கே போனீர்களா? அப்போது என்ன நடந்தது? பயந்தீர்களா?' என்று அடுக்கடுக்காகக் கேட்டால் பயனாளி குழம்பிவிடுவார். ஒரு நேரத்தில் ஒரு கேள்வி கேட்பதே சிறந்தது.

**குறுக்கு விசாரணை செய்யக்கூடாது:** காவல்துறை விசாரணை போல இல்லாமல், கேள்விகள் மென்மையாகவும், அக்கறையுடனும் இருக்க வேண்டும்.

**அசை போட அரை நிமிடம்** :

'கேள்வி கேட்டல் திறன் வாடிக்கையாளர்களுக்கு உதவ உதவியாக இருக்கும்'

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.

மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

# அம்புரோஸ் அறநெறி அமைப்பு

அருள்சான்று நிலையம், பரமக்குடி.

ஏழைகளுக்குக் தாராளமாய்க் கொடு; இதனால் இறை ஆசி முழுமையாக உனக்குக் கிடைக்கும். சீராக் 7:32

ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்; அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்து விடுவார். நீமொ 19:17

இயேசுவுக்கு புகழ்! அம்புரோஸ் அறநெறி அமைப்பு உறுப்பினர்கள் சென்ற ஆண்டு 2025 சனவரி மாதம் தங்கள் இல்லங்களுக்கு நிதி திரட்ட வருகைதந்த போது நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தீர்கள் நன்றி! இந்த ஆண்டு 2026 சனவரி மாதம் ஆண்டுக்கு ஒருமுறை தங்கள் இல்லங்களுக்கு வருகிறோம் தாராள உள்ளத்தோடு உதவிட அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

| எண் | குழுமம் | தேதி. கிழமைகள் | வட்டாரங்கள் |
|---|---|---|---|
| 1 | 1 குழு | 10.01.2026 சனி<br>11.01.2026 ஞாயிறு | ஆவுடைப்பொய்கை, செக்காலை, செஞ்சை வட்டாரங்கள் |
| 2 | 2 குழு | 10.01.2026 சனி<br>11.01.2026 ஞாயிறு | இராம்நகர், புளியால், தேவகோட்டை வட்டாரங்கள் |
| 3 | 3 குழு | 10.01.2026 சனி<br>11.01.2026 ஞாயிறு | இடைக்காட்டூர், மானாமதுரை சிவகங்கை வட்டாரங்கள் |
| 4 | 1 குழு | 14.01.2026 புதன்<br>15.01.2026 வியாழன் | சருகணி, சி.கே. மங்கலம், ஆர்.எஸ். மங்கலம் வட்டாரங்கள் |
| 5 | 2 குழு | 14.01.2026 புதன்<br>15.01.2026 வியாழன் | இராமநாதபுரம், முத்துப்பேட்டை வட்டாரங்கள் |
| 6 | 3 குழு | 14.01.2026 புதன்<br>15.01.2026 வியாழன் | இராமேஸ்வரம், தங்கச்சிமடம் பாம்பன் வட்டாரங்கள் |
| 7 | 1 குழு | 17.01.2026 சனி<br>18.01.2026 ஞாயிறு | சாலைகிராமம், காளையார்கோவில் வட்டாரங்கள் |
| 8 | 2 குழு | 17.01.2026 சனி<br>18.01.2026 ஞாயிறு | பரமக்குடி, மகிண்டி மிக்கேல்பட்டணம் வட்டாரங்கள் |
| 9 | 3 குழு | 17.01.2026 சனி<br>18.01.2026 ஞாயிறு | சாயல்குடி, கமுதி வட்டாரங்கள் |



## அனைவருக்கும் பொங்கல் மற்றும் தமிழர் திருநாள் வாழ்த்துகள்

## யூபிலி ஆண்டில் என்னை மன்னியும்

- ஆண்டவர் எளியோருக்கு அடைக்கலமாய் இருக்கிறார் என்பதை மறந்து பாதுகாப்பை பணத்திலும், பொருளிலும், மனிதர்களிலும் தேடி வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (திப. 14:6).
- ஆண்டவர் உனக்கு என்றுமுள ஒளியாயிருக்கிறார்; என்பதை மறந்து உலகம் காட்டும் மாய ஒளியில் வாழ்வைத் தொலைத்ததற்காக மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (எசாயா 60:20)
- அஞ்சாதே நான் கேடயமாய் இருப்பேன் என்பதை அறிந்தும், உடல்நலம், சாவு, எதிர்காலம் பற்றி கவலையில் உளன்று வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (தொநூ.15:1)
- ஆண்டவரே எனக்கு ஆதரவாய் இருப்பார் என்பதை மறந்து மனித ஆதரவை மட்டும் நம்பி வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (திபா. 3:5)

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

ஆம் மாத செபக் கருத்து

- கத்தோலிக்கர்களின் வாழ்வும், வழிபாடும் இறைவார்த்தையில் வேரூன்றியாகதாக அமைய
- இறைவார்த்தையின் ஆற்றலையும், வல்லமையையும் அனைவரும் உணர்ந்து வாழ.
- இறைவார்த்தையை வாசித்து தியானிக்கும் செயல்பாடுகள் திரு அவையில் ஆழம் பெற.
- தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் நேர்மையுடன் நடந்து சனநாயகத்யையும் தமிழர்கள் நலன் பேணும் அரசு அமைய
- தமிழர்கள் மற்றும் தமிழ் மொழியின் செழுமையை எல்லோரும் புரிந்து கொண்டு உரிய மாண்பை வழங்கிட
- இந்தியாவில் சனநாயக மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகளும், நிறுவனங்களும் பாதுகாக்கப்பட.
- மதவெறியால் வன்மை முறையிலும் பிளவுகளை உண்டாக்கத் தூண்டும் தீய சக்திகள் கட்டுப்படுத்த.

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- தமிழர் பண்பாட்டுக் கூறுகளைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்தல்.
- ஏழை விவசாயிகள் விற்கும் உணவுப் பொருள்களை பேரம் பேசாமல் வாங்குதல்.



புதிய பணியாளர்கள் பயிற்சி
அருள்சான்று நிலையம்



புதிய பணியாளர்கள் பயிற்சி
பூதலூர்



பணிக்குழு சந்திப்பு-காளையார்கோவில்



விரிவாக்க உள்ளுயிர்க்குழுக் கூட்டம்
அருள்சான்று நிலையம்

அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை



அருள்சான்று நிலையம்



அமைதியகம்

## விண்ணகப்பிறப்பு

செக்காலை வட்டாரத்தைச் சார்ந்த நற்பணி V. அடைக்கலம் அவர்கள்
25.11.2025 அன்று விண்ணக பிறப்படைந்தார்கள்.
அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற்றி அடையட்டும்.



படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **திருப்பாடல்கள் 65-67 அதிகாரங்களுக்குள்**



# புதிய பணியாளர்கள் பயிற்சி




**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com